## <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>

## <u>STC No.280/2025</u>

எதிரி ஆஜர்

அ.சா.– 1 திருமதி. சாமுண்டீஸ்வரி க/பெ. சரவணன் நாள் – 07.08.2026

**குறுக்கு விசாரணை–**

1. நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டால் M.Com படித்துள்ளேன். திருமணமாகிவிட்டதா என்று கேட்டால் திருமணம் ஆகிவிட்டது. எங்கு குடியிருக்கிறேன் என்று கேட்டால் தற்சமயம் நான் கூடுவாஞ்சேரியில் இருக்கிறேன். செங்கல்பட்டில் எனக்கு சொந்த வீடுள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் கூறியதன் அடிப்படையில் தான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமென்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்சமயம் நான் வேலை பார்க்கவில்லை. இதற்கு முன்பு நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். எவ்வளவு சம்பளம் பெற்று வந்தேன் என்றால் ரூ.25,000/–. எந்த வருடம் வேலை பார்த்தேன் என்றால் 2018 ம் ஆண்டு வரை வேலை பார்த்தேன். செங்கல்பட்டில் எங்கு எனக்கு வீடுள்ளது என்று கேட்டால் முருகேசனார் தெருவில் உள்ளது. எவ்வளவு நாட்களாக கூடுவாஞ்சேரியில் வசித்து வருகிறேன் என்று கேட்டால் 4 ஆண்டுகளாக.

2. எதிரியையும், அவரது அப்பாவையும் எப்போதிலிருந்து எனக்கு தெரியுமென்று கேட்டால் 2020 லிருந்து. எதன் அடிப்படையில் அவர்களை தெரியுமென்றால் எங்கள் வீட்டில் எலக்ட்ரிகல் வேலை செய்துள்ளார்கள். செங்கல்பட்டில் எனக்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு வீடு. எந்த வீட்டிற்கு எலக்ட்ரிகல் வேலை செய்தார்கள் என்றால் நாங்கள் குடியிருந்த பழைய வீட்டிற்கு. நான் புதியதாக கட்டிய வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் தான் அந்த வேலையை பார்த்தார் என்றால் சரிதான். எதிரியின் தந்தை தான் எலக்ட்ரிகல் மற்றும் கன்ஸ்ரக்சன் வேலையை பார்ப்பார் என்றால் சரிதான். எதிரிக்கு கன்ஸ்ரக்சன் வேலையை பற்றி தெரியாது என்றால் தவறு எதிரிக்கும், அவரது தந்தைக்கும் அந்த வேலை நன்கு தெரியும். எதிரி 2012 ம் ஆண்டிலிருந்து இன்றைய தேதி வரை டாக்சி டிரைவராக பணிபுரிகிறார் என்றால் தவறு. கன்ஸ்ரக்சன் வேலைக்காக எப்போது எதிரியை அணுகினேன் என்று கேட்டால் நான் அணுகவில்லை எதிரி மற்றும் அவரது அப்பாவும் சேர்ந்து கன்ஸ்ரக்சன்

வேலையை முடித்து தருவதாக அவர்கள் தான் என்னை அணுகினார்கள். எந்த மாதம், எந்த வருடம் அவர்கள் என்னை அணுகி கேட்டார்கள் என்ற விவரத்தை புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கு தேவையான எலக்ட்ரிகல் பொருட்களை சண்முகம் கடையில் பெறுவோம் என்றால் சரிதான். எதிரியின் தந்தையும் கன்ஸ்ரக்சனுக்கு தேவையான பொருட்களை அந்த கடையில் தான் பெறுவார் என்றால் சரிதான். சண்முகம் எலக்ட்ரிகல் ஓனர் எனது உறவினர் என்றாலும், அங்கு பொருட்கள் வாங்கும் போது எதிரியின் அப்பாவை பார்த்து கன்ஸ்ரக்சனுக்காக நாங்கள் தான் அவரை அணுகினோம் என்று சொன்னால் தவறு. அவ்வாறு எதிரியின் தந்தையை அணுகி கேட்ட போது நாங்கள் கேட்ட பிளானை அவர் போட்டு கொண்டு வந்து காண்பித்தார் என்றால் சரிதான். எத்தனை பிளான் எங்கள் வீட்டிற்காக எதிரியின் தந்தை காண்பித்தார் என்றால் ஒன்று.

3. எத்தனை சதுரடிக்கு வீடு கட்டுவதாக எதிரியிடம் தெரிவித்தோம் என்றால் 1090. கீழ் தளம் மற்றும் மேல்தளம் சேர்த்து 2047 சதுரடி என்றால் சரியாக நினைவில்லை. 4 முறை எதிரியின் தந்தை பிளான் போட்டு கொடுத்தாரென்றாலும், 4 வது முறை தான் அதை ஒப்பு கொண்டோம் என்றாலும், எதிரியின் தந்தை 4 முறை வெவ்வேறு சைட்டில் அவர் வேலை செய்த பிளானை காண்பித்தார் பின்னர் நாங்களே ஒரு இன்ஜினியரிடம் அழைத்து சென்று பிளான் போட்டோம் அதை ஒப்புகொண்டார். நான் கூறிய இன்ஜினியர் பெயர் என்னவென்றால் லதா. அந்த பிளானை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வீட்டை கட்டுவதற்கு எவ்வளவுதொகை நிர்ணயிக்கப்பட்டது என்றால் ரூ.31,46,000/-. அதற்கு அக்ரிமெண்ட் போடப்பட்டதா என்றால் எதிரியின் தந்தை போட்டார். எந்த தேதியில் அந்த அக்ரிமெண்ட் போடப்பட்டது என்றால் சரியாக நினைவில்லை. சாட்சியிடம் மதசாஆ 5 ஆவணம் காண்பிக்கப்பட்டது அந்த ஆவணத்தின்படி எந்த தேதியில் அக்ரிமெண்ட் போடப்பட்டுள்ளது என்றால் 14.04.2023. எதிரியின் தந்தை தட்டச்சு செய்து வந்த தாளில் இருவர் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான் நானும், எனது கணவரும் கையொப்பம் செய்தோம்.

4. என்னுடைய கையொப்பம் அந்த ஆவணத்தில் எங்குள்ளது என்று கேட்டால் என்னுடைய கையொப்பம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் இல்லை. மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. ஏன் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சமர்ப்பிக்க

தயாராக இருக்கிறேன். எதிரியின் தந்தை கையொப்பம் கடைசி பக்கத்தில் தான் உள்ளது மற்ற பக்கங்களில் இல்லையென்று சொன்னால் சரிதான் அவர் அதுவே போதுமென்று சொன்னார். எதிரியின் தந்தை கொடுத்த அக்ரிமெண்ட் வேறு நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அக்ரிமெண்ட் வேறு என்று சொன்னால் தவறு. இந்த அக்ரிமெண்டில் உள்ள சங்கதிகளை எங்களுக்கேற்றார் போல் பின்னிட்டு தயார் செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் வீடு கட்டுவதாக பேசிய இடத்தில் ஏற்கனவே இருந்த பழைய வீட்டினை இடித்துவிட்டு புதிய வீடு கட்டவேண்டுமென்று தான் பேசிகொண்டோம் என்றால் சரிதான். அந்த வீட்டை இடிப்பதற்கு எவ்வளவு தொகை பேசப்பட்டது என்றால் தொகை எதுவும் பேசப்படவில்லை அதறகாக ரூ.56,000/- பணம் கொடுத்தேன். அந்த வீட்டை இடிப்பதற்கு ரூ.92,660/- தொகை பேசப்பட்டது என்றாலும், அந்த தொகை இன்றைய தேதி வரை எதிரியின் தந்தைக்கு கொடுக்கப்படவில்லையென்றாலும் அவ்வாறு எதுவும் பேசப்படவில்லை.

5. எவ்வளவு நாட்களுக்குள் வீட்டை முடிக்கவேண்டுமென்று ஒப்பந்தம் போட்டோமென்றால் மார்ச் முதல் செப்டம்பர் மாதம் வரை. 2023 க்குள் முடிப்பதாக கூறி. ஒப்பந்தத்தில் அந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் மதசாஆ 5 ஆவணத்தில் அந்த விவரம் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் 25 வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் மாதம் வரை கால அவகாசம் குறிப்பிடடு ஒப்பந்தம் போடப்பட்டது என்றாலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் செப்டம்பர் மாதம் வரை என்று பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. அக்ரிமெண்டில் எதிரி கையொப்பம் செய்து கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. எதிரியின் பெயர் அக்ரிமெண்டில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

6. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலம், அறிவிப்பு, புகார் ஆகியவற்றில் மே 2023 முதல் செப்டம்பர் 2023 வரை கட்டுமானம் செய்வதற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் மேற்படி காலகட்டத்தில் பணம் ஜீபே மூலம் எதிரி பெற்று கொண்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தெந்த தேதியல் எவ்வளவு தொகை எதிரியின் தந்தைக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தினை நான் இந்த வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு கூறவில்லை மொத்தமாக கூறியுள்ளேன். மொத்தமாக எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால்

இருபத்தைந்து லட்சத்து ஐம்பத்தாயிரத்து சொச்சம் கொடுத்துள்ளேன். மேற்படி தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரூ.56,000/– ரொக்கமாக எதிரி மற்றும் அவரது தந்தைக்கு கொடுத்தேன் மற்ற தொகைகளை எதிரியின் ஜீபே மற்றும் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன். மேற்படி ரூ.56,000/– தொகையினை எந்த தேதி, மாதத்தில் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை மார்ச் அல்லது ஏப்ரல் 2023 ல் கொடுத்திருப்பேன். மேற்படி தொகையை நான் மொத்தமாக கொடுத்தேனா என்றால் சிறிது சிறிதாக எதிரி மற்றும் அவரது தந்தையிடம் கொடுத்தேன். எங்கு வந்து அந்த தொகையை பெற்று கொண்டார்கள் என்றால் முருகேசனார் தெருவில் உள்ள எங்களது வீட்டில் வந்து பெற்று கொண்டார்கள். எதிரியும் வந்தாரா என்றால் ஆம். வழக்கிற்காக நான் மேற்படி விவரத்தை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. எதிரிக்கு நான் கூறிய காலகட்டத்தில் ஒரு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அவர் வீட்டில் ஓய்வில் இருந்தாரென்று சொன்னால் ஆம் ஆனால் பணம் பெறுவதற்காக வந்தார். அவர் நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்தார் தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. எதிரியின் தந்தை ஒப்பந்தத்தின்படி கட்டிடத்தை கட்டி முடித்தாரா என்றால் இல்லை 40 % தான் முடித்தார். இரு தளங்கள் போடப்பட்டது அத்தோடு கட்டுமானத்தை நிறுத்திவிட்டார். 40 % த்திற்கு எவ்வளவு தொகை என்று இன்ஜினியர் வைதது எஸ்டிமேட் போட்டோமா என்றால் போட்டோம். எதிரியின் தந்தை எவ்வளவு தொகைக்கு வேலையை முடித்திருப்பதாக அவர்கள் கூறினார்கள்எ ன்று சொன்னால் ரூ.17,80,000/– தொகைக்கு வேலையை முடித்திருப்பதாக சொன்னார்கள். எஸ்டிமேட் போட்ட நபரின் பெயர் என்று கேட்டால் பெயர் நினைவில்லை. அதற்காக எழுத்துபூர்வமாக சான்று வழங்கினார்களா என்றால் வழங்கினார்கள் அந்த ஆவணம் என்னிடம் உள்ளது.

8. எந்த தேதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றால் ஞாபகமில்லை. ஆய்வு செய்த நபரின் பெயர் என்னவென்று கேட்டால் பெயர் நினைவில்லை அரசு அங்கீகாரம் கொடுக்கப்பட்ட வேல்யூவர். மேற்படி வேல்யூ செய்த விவரங்களை இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ரூ.25,00,000/– கொடுத்ததற்கான அக்கவுண்ட்ஸ் உள்ளதா என்றால் வங்கி பரிவர்த்தனை என்பதால் அதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது. அந்த ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் தந்தை ஒரு அக்கவுண்ட்ஸ் பராமரித்து வந்தார் என்று சொன்னால் அதை அவர் என்னிடம் காட்டியதில்லை. எத்தனை நபர்கள் அந்த

வீட்டிற்கு வேலை செய்தார்கள் என்றால் 7 அல்லது 8 நபர்கள் வேலை செய்தார்கள். அந்த வேலை செய்த நபர்களுக்கு கொடுத்து வந்த சம்பளம் மற்ற விவரம் ஆகியவற்றை ஒரு நோட்டு புத்தகம் வைத்து எதிரியின் தந்தை கணக்கு பராமரித்து வந்தார் என்றாலும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அந்த கணக்கை பார்த்ததில்லை. நாங்கள் குடியிருக்கும் முருகேசனார் தெருவில் எதிரியும், எதிரியின் தந்தையும் வாடகை வீட்டில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

9. எங்கள் வீட்டில் உள்ள எலக்ட்ரிகல் வேலையை யார் பார்த்தார்கள் என்றால் எனது அண்ணன் பழனி. எதிரியின் தந்தையிடம் எனது அண்ணன் எலக்ட்ரிகல் வேலை பார்ப்பார் என்று நாங்கள் கூறியதால் எனது அண்ணனை அந்த பணிக்கு எதிரியின் தந்தை வைத்து கொண்டார் என்றால் தவறு. 10.01.2023 தேதியிட்ட ஒப்பந்தத்தின்படியும், பிளான் படியும் எதிரியின் தந்தை அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டாரென்றாலும், அப்போது 10 வேலைகளுக்கு மேல் ஆல்ரேஷன் சொன்னதால் அந்த வேலைகளையும் எதிரியின் தந்தை செய்து கொடுத்துள்ளார் என்றாலும், அதன்படி எதிரியின் தந்தை ரூ.33,09,568/- தொகைக்கு வேலைகளை முடித்து கொடுத்துள்ளார் என்றாலும், நாங்கள் கொடுத்த தொகையான ரூ.25,00,000/-த்திற்கு மேல் வேலை பார்த்ததால் மீதி தொகைய எதிரியின் தந்தை கேட்கும் போது நாங்கள் அதை கொடுக்கவில்லையென்று சொன்னால் தவறு. எதிரியின் தந்தைக்கு கூடுதலாக செய்த வேலைக்கு கொடுக்க வேண்டிய தொகை மொத்தம் ரூ.7,80,428/- என்று சொன்னால் தவறு.

10. மேற்படி தொகையை எதிரியின் தந்தை கேட்டதால் அவரிடம் தகராறு செய்து காவல் நிலையம் சென்று பொய்யான புகார் அவர் மீது கொடுக்கப்பட்டது என்றால் தவறு. எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் கட்டுமான பணியை தகவல் இல்லாமல் நிறுத்திவிட்டார்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டாலும் எடுக்கவில்லை, வீட்டிற்கு சென்று பார்த்தோம் ஆளில்லை அதனால் புகார் கொடுத்தேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரியின் தந்தை எங்களது வீட்டின் எதிரேயே கட்டுமான பணியை செய்து வந்தாரென்றாலும் தவறு. எந்த போலிசார் விசாரணை செய்தார் என்றால் பெயர் நினைவில்லை. பொம்முராஜ் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தாரா என்றால் இல்லை அவர் எங்களது உறவினர் பணி ஓய்வு பெற்றுவிட்டார் எங்களுடன்

வந்தார். அவர் எங்குள்ளார் என்றால் கூடுவாஞ்சேரி. காவல் நிலையத்தில் எத்தனை புகார் கொடுத்தேன் என்றால் இரண்டு. அந்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொம்முராஜ் என்னையும், எதிரியின் தந்தையையும் நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்யவில்லை எங்களுடன் வந்தார். நீதிமன்றத்திற்கு எதற்காக வரவழைத்தார் என்றால் என்னுடன் வந்தார். பொம்முராஜ் அவரது வேலையாக நீதிமன்றத்திற்கு வந்தார். நீதிமன்றத்தில் 2 வது தளத்தில் வழக்கறிஞர்கள் அறையின் எதிரில் உள்ள ரூமில் தான் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் இல்லை. பொம்முராஜ் என்பவர் தான் எதிரியின் தந்தையை மிரட்டி நீதிபதி அழைத்ததாக வரவழைத்து அவரிடம் இருந்த அக்ரிமெண்ட் ஆகியவற்றை கிழித்து போட்டுவிட்டார் என்று சொன்னால் தவறு. என்னிடம் காட்டப்படும் கிழிந்த அக்ரிமெண்ட், ஒரு நோட்டு ஆகியவற்றில் உள்ளவற்றை கிழித்து போட்டுவிட்டு மிரட்டி பொம்முராஜ் எதிரியின் தந்தையை அனுப்பினார் என்று சொன்னால் தவறு.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.